அச்சுறுத்தும் எல்நினோ பாதிப்பு;

சென்னையில் வேகமாகச் சரியும் நிலத்தடி நீர்மட்டம்!

20 அடிக்கும் கீழ் சென்றதால் மக்கள் அதிர்ச்சி!



சென்னை, அக்.10- எல்நினோ பாதிப்பு அச்சுறுத்த தொடங்கியுள்ள நிலையில், அதன் எதிரொலியாக சென்னையில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. 20 அடிக்கும் கீழ் சென்றதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

"எல் நினோ" நிகழ்வால் உலக வெப்பநிலை அதிகரிப்பு, தீவிர வறட்சி மற்றும் பருவமழை குறைபாடு போன்ற கடுமையான வானிலை மாற்றங்கள் ஏற்படும் என வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை, மழைப்பொழிவு வெகுவாக குறையும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க, 'எல் நினோ' பாதிப்பு இப்போதே சென்னையில் பிரதிபலிக்க தொடங்கி விட்டதாக தெரிகிறது. ஆனால் சென்னையில் இந்தாண்டு போதிய பருவமழை இல்லாதது மற்றும் நிலவி வரும் கடுமையான வெப்பம் காரணத்தால், நகரின் பிரதான குடிநீர் ஏரிகளில் நீர் இருப்பு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. வெயில் தாக்கம் என்பது அதிகரித்து கொண்டே செல்கிறது.

சென்னை மாநகரின் மாதாந்திர குடிநீர் தேவை தோராயமாக 1 டி.எம்.சி என்ற அளவில் உள்ள நிலையில், தற்போதைய நீர் இருப்பு அடுத்த சில மாத தேவையை மட்டுமே சமாளிக்க போதுமானது உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகரிப்பாலும், சென்னை பெருநகர எல்லை விரிவாக்கத்தாலும், சென்னையின் குடிநீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது.

கடந்த 2025ம் ஆண்டில் நிலத்தடி நீர்மட்டம் 19.03 அடியாகவும், 2026ம் ஆண்டில் 20.87 அடியாகவும் குறைந்துள்ளது. அதுமட்டுமல்ல, கடந்த இரு மாதங்களில், அதாவது ஜூன் மாதத்தைவிட ஜூலையில், சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளது.

இதில் குறிப்பாக மாதவரம், தண்டையார்பேட்டை, திரு.வி.க. நகர், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் பகுதிகளில் மட்டும் சுமார் 3 அடி வரை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த ஆண்டு (2025) ஜூலை மாதத்தை விட, இந்தாண்டு (2026) ஜூலை மாதத்தில் ராயபுரம், திருவிக, நகர், அம்பத்தூர், அண்ணா நகர் ஆகிய மண்டலங்களில் 4 முதல் 6 அடி வரை குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் நடவடிக்கையா?

பெரியபாளையத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

அக். 31-க்குள் திட்டத்தை ரத்து செய்யாவிட்டால் கோட்டையை முற்றுகையிடுவோம் என எச்சரிக்கை!



திருவள்ளூர் அக். 10;- ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதே அரசின் கடமை! அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் ஆட்டோ ஓட்டுநர்களின் குடும்பங்களின் நிலை என்ன? என்ற கேள்வியை எழுப்பி, திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெரியபாளையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் இயங்கி வருகின்றன. பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதுடன், ஏராளமான குடும்பங்களின் வாழ்வாதாரமாகவும் ஆட்டோ தொழில் விளங்கி வருகிறது.

இந்நிலையில், கடந்த 2-ம் தேதி முதல் பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, தங்களின் வருமானம் பாதிக்கப்படுவதாக ஆட்டோ ஓட்டுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மகளிருக்கு இலவசப் பயணம் என்பது வரவேற்கத்தக்கதுதான்; அதே நேரத்தில், ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட வேண்டாமா? என்ற கேள்வியை முன்வைத்து, பெரியபாளையத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

பெரியபாளையம் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத் தலைவர்கள் கோபி, மன்சூரலி, சுனில் ஆகியோர் ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கினர். சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டக்குழுத் தலைவர் அருள், சிஐடியு மாவட்டத் துணைத் தலைவர் வேலு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தால் தங்களின் தொழில் பாதிக்கப்படுவதாகக் கூறிய ஆட்டோ ஓட்டுநர்கள், தங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மோட்டார் வாகனச் சட்டத்தாலும் தாங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர்கள், உழைக்கும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உரிய தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று முழக்கமிட்டனர்.


வரும் அக்டோபர் 31-ம் தேதிக்குள் இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால், கோட்டையை நோக்கிப் பேரணியாகச் சென்று முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் எச்சரித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரியபாளையம், தண்டலம், பாலவாக்கம், கன்னிகைப்பேர், வடமதுரை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்

லயன் வீ. தியாகராஜனின் தந்தை ஏ.என். வீராசாமி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!



சென்னை. அக். 10 - சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன், வீ. ஜெயபால், 3வது வட்ட பிரதிநிதி வீ. தனபால், வீ. தனசேகர், வீ. தேவி தனலட்சுமி ஆகியோரின் தந்தையாரும், என். பிரபு அவர்களின் மாமனாருமான திருவொற்றியூர் மேற்கு பகுதி, எண்ணூர் அன்னை சிவகாமி நகர் 3வது வட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி ஏ.என். வீராசாமி (வயது 80) அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக 09.10.2026 அன்று காலை 10 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்

தகவல் அறிந்ததும் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள் தாசன் கழகத் தோழர்களுடன் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

உடன் மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் ஜி. சந்திராபோஸ், பகுதி பொருளாளர் எம். வஜ்ரவேல், மாவட்ட பிரதிநிதி எம். சந்திரகுமார், பொன். கோ. விஜயன், மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவகுமார், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், பகுதி பிரதிநிதிகள் வை. சின்னையன், எம். கார்த்திக், எஸ். ராஜேஷ், ஆர். நரேன்குமார், எஸ். ஜோயல், மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (10.10.2026 சனிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் அன்னை சிவகாமி நகர் 2-வது தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு எர்ணாவூர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நினைவிலே என்றென்றும் நிலைப்பவர் மு.வ.

பேரறிஞர் அண்ணா பொருத்தமாகப் போற்றிய
ஓரறிஞர்;பெரியாரை
உளங்கொண்டு மதித்தவர்!
சீர்திருத்தப் பூம்புகார்
திரைப்படம் பாராட்டி
ஊர்ஒப்பக் கலைஞரை
உயர்த்தியே புகழ்ந்தவர்
ஈரெழுத்து மு.வ.எனும்
இன்றமிழ்ப் பேராசிரியர்!

வேர்போல மறைந்திருந்தும்
வேதாந்தம் சமற்கிருதம்
நேராக மறுத்தவர்;
நெருப்பிந்தித் திணிப்பெதிர்ப்புப்
போராக மாறுகையில்
போற்றிவந்த பத்மஸ்ரீ
சீரான விருதினைத்
திருப்பியவர் ஏற்காமல்;
ஊரார்வோர் அடக்குமுறை
ஒருதுளியும் ஒப்பாமல்!

உலகமெலாம் புகழ்பெற்ற
ஒப்பற்ற தமிழறிஞர்;
இலக்கியம் பலபடைத்த
ஈடற்ற கருத்தறிஞர்;
பலகருத்தால் இளைஞர்களைப்
பண்படுத்த முயன்றவர்;
நிலவாகத் தெரிந்தாலும்
நீள்கதிராய் ஒளிர்ந்தவர்
விலக்குவன விலக்கியே
விளக்கங்கள் தந்தவர்!

கலக்கங்கள் குழப்பங்கள்
கண்மூடிப் பழக்கங்கள்
இலக்கில்லா மயக்கங்கள்
எப்போதும் சீற்றங்கள்
புலராத எண்ணங்கள்
பொழுதெலாம் கள்ளங்கள்
பலவற்றால் மனங்கெட்டுப்
பாழாகப் போகாமல்
அலைபோல அலையாமல்
ஆரவாரம் செய்யாமல்
நிலைகெட்டுத் திரியாமல்
நீர்மையுடன் ஒழுக்கமாய்
மலைபோல உயர்வதற்கு
மனிதராய் வாழ்வதற்கு
விலையிலா மணிகளாய்
விழுமியங்கள் உரைத்தவர்
தலையான அறவழியே
சரியெனச் சாற்றியவர்!

ஈரெழுத்து முவ எனில்
இலக்கிய உலகமன்றி
ஓரெழுத்துக் கற்றோரும்
உளமாரப் போற்றிடப்
பேரெடுத்து நின்றவர்
பிறருள்ளம் வென்றவர்!

காரெடுத்த மழைபோலக்
காற்றெடுத்த ஒலிபோலத்
தேரெடுத்த கவின்போலத்
திகழ்காலை விடியல்போல்
நீரெடுத்த ஆறுபோல்
நெடுந்தெளிவும் எளிமையுமாய்ப்
போரெடுத்து மொழியாமல்
பொருள்விளங்கப் புகன்றவர்!



எண்பது நன்னூல்கள்
இயற்றியவர்;ஒவ்வொன்றும்
நண்பகல்போல் தெளிவாக
நற்கருத்து நல்குவது!
வெண்மதிபோல் தண்மையாய்
வெங்கதிர்போல் செம்மையாய்ப்
பண்படச் செய்வது;
பயன்தர வல்லது!
மண்கெட மனங்கெட
மலிவாக எழுதியே
புண்படச் செய்பவர்கள்
புற்றீசல் போல்சாய
நுண்ணறிவால நூலறிவால்
நுவன்றிடும் பாலறிவால்
திண்ணிய கருத்தறிவால்
திகழ்பவர் மு.வ.

பேராசிரியர்
மா.செல்வராசன்

பச்சையப்பன் கல்லூரி
பழம்பெருங் கல்லூரி;
உச்சிமேல் வைத்துமிக
உயர்வாகக் கொண்டாடக்
கச்சிநகர் அண்ணா
கற்றதொரு காரணம்;
நச்சியே பயில்வதற்கு
நாடியது மு வ எனும்
மெச்சுபுகழ் ஆசிரியர்
மிளிர்ந்ததொரு காரணம்!

நல்லவராய்த் தமிழர்கள்
நாட்டிலே இருப்பதுடன்
வல்லவராய் விளங்குதல்
வேண்டுமென வரைந்தவர்;
செல்வராய் வாழ்வதினும்
செம்மையாய் வாழ்வதே
பல்வகையில் நல்வாழ்வாம்
பட்டறிவால் பனுவலால்
சொல்லியவர்;ஏழையர்
துயரங்கள் தீர்வதற்கு
நல்கியவர் தீர்வுகள்!
நன்னெறி ஒன்றுதான்
அல்வழி செல்லாமல்
அறவழி செலுத்துமெனப்
பொல்லாப்புப் புரியாமல்
புகழ்வழி சேர்க்குமென
இல்லறம் செழித்திட
ஏற்றவை செப்புமெனக்
கல்வியும் ஒழுக்கமும்
கருத்தூறும் சிந்தனையும்
வல்லமை தருமென
வாய்மையை உரைத்தவர்!

பள்ளிவரை பயின்றவர்.பின்
பலபட்டம் பெற்றவர்
அள்ளிவரும் அறிவுதான்
ஆறாகப் பெருகியவர்;
உள்ளறிவு மிக்கவர்
ஒழுக்கத்தில் தக்கவர்
தெள்ளிய உளத்தினர்
தேவையான வளத்தினர்
துள்ளிய இளமைமுதல்
தமிழுக்குத் தொண்டாற்றும்
உள்ளமே கொண்டவர்
உலகெலாம் கண்டவர்!

கல்லூரி பல்கலைக்
கழகப்பே ராசிரியர்
தொல்நகர் மதுரையின்
துணைவேந்தர்
இல்லையென ஏங்காமல்
இடையறா உழைப்பினால்
வெல்லலாம் என்றவர்
வென்றுமே நின்றவர்!

திருக்குறள் தெளிவுரை
தெரிந்ததுதான் எல்லோர்க்கும்;
ஒருகோடி இவர்உரை
விற்றதெனும் உண்மைதான்
பெருந்திறனைக் காட்டிடும்
பெரும்புலமை நாட்டிடும்!
பொருள்விளங்க
அவ்வுரையைப்
பொழிந்தவர் மு . வ .தான்
இருக்கின்ற வீடெல்லாம்
இலகுமந்த எளியவுரை!

கடிதங்கள் நாடகங்கள்
கட்டுரைகள் சிறுகதைகள்
விடியலாய்ப் புதினங்கள்
வெற்றியர் வரலாறு
முடியான இலக்கிய
முற்றாய்வு;மொழியியல்
துடிப்பான அரசியல்
துலக்கிடும் வரைவுகள்
வடிவான சங்கநூல்
வளமான ஆய்வுகள்
நெடிதான இலக்கிய
வரலாறு,பயணமென
வடித்தவர்,இலக்கிய
வகைகளைப் படைத்தவர்
இடியாகத் தாக்கியது
இறப்பு அவரை அறுபதொட்டி!

ஆயிரம்பேர் தமிழறிஞர்
ஆகலாம் ஆனாலும்
ஞாயிறுபோல் இவர்ஒருவர்
நற்றமிழாய் ஒளிர்பவர்
மாயினும் இவரென்றும்
மறையாமல் வாழ்பவர்
தாயினும் பரிந்தவர்
தகைமையே புரிந்தவர்
போயினும் உலகுவிட்டுப்
புகழென்றும் போவதில்லை
தூயவர் தமிழுக்குத்
தொண்டுகள் செய்பவர்
வாழுவர் ஒப்பேது?
வையத்தில் முப்போது!

2027 மார்ச்சில் மேகதாது அணைக்கான அடிக்கல் நாட்டப்படுமாம்!

கர்நாடக அமைச்சரின் பேச்சால் தமிழக விவசாயிகள் கொந்தளிப்பு!

பெங்களூரு, அக். 10 - அடுத்த ஆண்டு மார்ச் மாதம் மேகதாது அணைக்காண அடிக்கல் நாட்டப்பட்டுவிடும் என கர்நாடக நீர்பாசனத்துறை அமைச்சர் செல்வராயசாமி பேசியுள்ளது தமிழக விவசாயிகளிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

கர்நாடக மாநிலம் மண்டியா பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அமைச்சர் செல்வராயசாமி, "மேகதாதுவில் புதிய அணை கட்டுவதே காவிரி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்றும், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மேகதாதுவில் புதிய அணை கட்ட அடிக்கல் நாட்டப்படும் என்றும் அறிவித்தார்.

இத்திட்டத்திற்கான தயாரிப்புப் பணிகள் 99 சதவீதம் நிறைவடைந்து விட்டதாகவும் அவர் கூறினார். கர்நாடக அமைச்சரின் இந்த அறிவிப்பு தமிழக விவசாயிகளிடையே அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது தமிழக அணைகளில் உள்ள தண்ணீரை அடுத்த 18 நாட்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்பது விவசாயிகளுக்கு வேதனையான செய்தியாகும்.



தாம்பரத்தில் உலக பார்வை தினத்தை முன்னிட்டு வாசன் கண் மருத்துவமனை நடத்தும் மாணவர்கள் விழிப்புணர்வு நடை பயணத்தை பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவருமான டி.காமராஜ் துவக்கி வைத்தார். உடன் தலைமை மருத்துவ அதிகாரி டி. கணேஷ்,மருத்துவக் குழுவினர், சதீஷ் 49வது வட்ட துணைச் செயலாளர் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.